# பறக்கும் தட்டுகள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# வானத்தில் பறந்து கொண்டிருக்கும் அந்த தட்டுகள் - அவர்கள் ‘பறக்கும் தட்டுகள்’ என்று அழைக்கின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-08-22M கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார்

68. வானத்தில் பறந்து கொண்டிருக்கும் அந்த தட்டுகள் - அவர்கள் 'பறக்கும் தட்டுகள்' என்று அழைக்கின்றனர்.

சரி, அதை பேசாமல் அப்படியே விட்டு விடுவது நல்லது.

"அவர்கள் (பறக்கும் தட்டில் வருகிற வர்கள்) எவ்விதம் காணாமற்போய் விடு கின்றனர் என்பதைக் குறித்து கேள்விப்பட் டீர்களா?" என்று கேட்கின்றனர்.

அவர்கள் சொல்வதைக் கேளாதீர்கள். அவர்கள் அங்குதான் நின்று கொண்

டிருக்கின்றனர். அவர்கள் நமது கண்களுக்குத் தென்படாமல் மறைந்துவிடுகின்றனர்.

அப்படித்தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கும். அவைகளில் ஒன்று கீழே இறங்கி வரும். பூமிக்குரிய இந்த சரீரம் வானத்துக்குரிய சரீரத்தை தரித்துக்கொள்ளும். அப்பொழுது தோல், மயிர், எலும்புகள்... அது ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாகும். அது விண்வெளியிலிருந்து கீழே இறங்கி வந்து அவர்களைக்கொண்டு செல்லும். அவையெல்லாம் (பறக்கும் தட்டுகள்) இப்பொழுதே வந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

'பென்டகன்' வானத்தில் தோன்றும் அந்த மர்மமான ஒளியைக் குறித்து வியந்துகொண்டிருக்கிறது.

ஜெபர்சன்வில்லில் வெளியிடும் செய்தித்தாள் ஒன்றில் இந்த மர்மமான ஒளியைக் குறித்து வெளியிட்டிருந்தனர்.

"அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்று அதில் எழுதியிருந்தது.

சிறு பிள்ளைகளே, நான் கூறுவதைக் கேளுங்கள். வரப்போகும் ஒருநாளில் அவை உங்களையும் கொண்டு செல்லும் (பாருங்கள், பாருங்கள்?).

கவலைப்பட வேண்டாம். ''சோதோமின் நாட்களில் நடந்தது போல...' என்று இயேசு கூறினதை நினைவு கூருங்கள்.

69. தேவன் சில தூதர்களுடன் இறங்கி வந்தார். அப்பொழுது அவர்கள் விசா

ரணை நியாயத்தீர்ப்பை (Investigation Judgment) நடத்தினர்.

அவர், "பாவம் நிறைந்த கூச்சலை நான் கேட்டேன். அது மிகவும் உரத்த சத்த மாயிருந்தது. அது உண்மையா இல்லையா என்று கண்டறிய நான் இறங்கி வந்தேன்" என்றார். அது சரிதான். அந்த பிரதான மானவர் ஆபிரகாமுடன் பின்தங்கி, அவ ருக்குப் பின்னால் இருந்த சாராளின் இரு தயத்திலுள்ள சிந்தனைகளைப் பகுத்தறிய முடிந்தது.

இப்பொழுது நீங்கள் சற்று கவனிப்பீர்க ளானால், இன்றைக்கும் அதுவே சம்ப விக்கிறது. அது விசாரணை நியாயத்தீர்ப்பு, சற்று பின்பு, சபையானது அதன் ஸ்தா னத்தில் நிலைநின்று, எல்லா வித்துக்களும்

அதனிடம் கொண்டு சேர்க்கப்பட்ட பின்பு, அவர்கள் போய்விட்டிருப்பார்கள்.

அவர்களுக்கு நேர்ந்தது என்னவென்று மற்றவர்களுக்கு தெரியாது. அவர்களைத் தேடிக்கொண்டு ஒருவர் ஒருபுறமாக செல்வார். பாருங்கள்? ஒருவர் போதகர் வீட்டுக்குச் செல்வார். வேறொருவர் இங் கும் வேறொருவர் அங்கும் செல்வார்கள். அவர்கள் அங்கில்லை என்பதை அறிந்து கொள்வார்கள்.

இவர்களுக்கு முன்னடையாளமா யிருந்த ஏனோக்கு காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார் (ஆதி 5:24). விசாரணைக்காக அவர்கள் இறங்கி வருகின்றனர். ஏனோக்கு மறுரூபமாதலின் தொடர்ச்சியாக, தற்போ தைய இஸ்ரவேலருக்கு முன்னடையாள

மாக, அவர்கள் பேழைக்குள் பிரவேசிக்கின்றனர்.



# அது, என்ன நடக்கிறதென்று பார்த்து நியாயம் விசாரிப்பதற்காக வரும் தூதர்கள், பாருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-08-15 இதை அறியாமலிருக்கிறாய்

213. பாருங்கள், பறக்கும் தட்டு என்ன வென்று உலகம் அறியாமலிருக்கிறது. ஆனால் உங்களுக்குத் தெரியும்... உங்க ளுக்குத் தெரியும். அது என்னவென்று நமக்குத் தெரியும்.

அது, என்ன நடக்கிறதென்று பார்த்து நியாயம் விசாரிப்பதற்காக வரும் தூதர்கள், பாருங்கள்.

அது 'பென்டகன்' போன்ற வேவு பார்க்கும் இடத்துக்கு வந்து, அவர்கள்

மின்னலைப் போல் அங்கிருந்து வேகமாக சென்று விடுகின்றனர்.

அது என்னவென்று அவர்கள் கண்டு பிடிப்பதற்கு முன்பே, அவர்கள் மறைந்து விடுகின்றனர்.

பாருங்கள், அது என்னவென்று அவர் களுக்குத் தெரியாது.

அவர்கள் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும். அவர்கள் அதை பறக்கும் தட்டுகள் என்றழைக்கின்றனர். அவர்களுக் குத் தெரியாது.

நாம் உலகத்தை கவனிப்போம், “மேலே வானத்தில் அடையாளங்களும், பயங்கரமான காட்சிகளும் உண்டாயிருக்கும் (இது பறக்கும் தட்டுகள்), அநேக இடங்களில் பூமியதிர்ச்சிகளும், கடல் கொந்தளிப்பும் (உயரமான அலைகள்), மனிதர்களுடைய இருதயங்கள் (பயத்தால்) சோர்ந்து போம், தேசங்களுக்கிடையே தொந்தரவு, தவிப்பான நேரமுமாயிருக்கும்."



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-02-07 கோத்திர பிதா ஆபிரகாம்

84. "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷ குமாரன் வரும் நாட்களிலும் நடக்கும். ஏனெனில் அவர்கள், புசித்தார் கள் குடித்தார்கள் பெண் கொண்டும் கொடுத்தும்; பெரிய கட்டிட திட்டங்களை வகுத்துமிருந்தார்கள்."

நாம் உலகத்தை கவனிப்போம், "மேலே வானத்தில் அடையாளங்களும், பயங்கரமான காட்சிகளும் உண்டாயிருக் கும் (இது பறக்கும் தட்டுகள்), அநேக இடங்களில் பூமியதிர்ச்சிகளும், கடல் கொந்தளிப்பும் (உயரமான அலைகள்), மனிதர்களுடைய இருதயங்கள் (பயத்

தால்) சோர்ந்து போம், தேசங்களுக் கிடையே தொந்தரவு, தவிப்பான நேரமு மாயிருக்கும்."



# வானத்தில் பயமுறுத்தும் காரியங்களையும், யாராலும் விவரிக்க இயலாத பறக்கும் தட்டுகள் போன்றவைகளை காண்கிறோம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: நம்ப முடியாதது, ஆனாலும் உண்மை!, பிப்ரவரி 6, 1964, பத்தி எண் 270

பூகோளயியல்படி இப்பூமியை நாங்கள் காண்கின்றோம்; அந்த அடையாளங்களை நாங்கள் காண்கின்றோம்; பற்பல இடங்களில் பூமியதிர்ச்சிகள், இராஜ்ஜியத்திற்கு விரோதமாய் இராஜ்ஜியங்கள் போன்றவற்றைக் காண்கிறோம்.

முன்னறிவிக்கப்பட்டக் காரியங்கள் நிகழ்வதை நாங்கள் காண்கிறோம்.

வானத்தில் பயமுறுத்தும் காரியங்களையும், யாராலும் விவரிக்க இயலாத பறக்கும் தட்டுகள் போன்றவைகளை காண்கிறோம்.

மனிதருடைய இருதயங்கள் கலங்குகின்றன, பூமியின் மேல் ஆராயும் நியாயத்தீர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

அணு குண்டுகள் எல்லா இடங்களிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு மணி நேரத்தில் முழு அழிவைக் கொண்டு வரக்கூடியதான சக்தி வாய்ந்த ஏவுகணைகளை நாங்கள் காண்கிறோம்.

வானத்திலிருந்து அக்கினிகளை பொழிந்து இப்பூமியை அழிப்பதற்காக எங்களுக்கு மேலாக வாயு மண்டலம் பரவியிருப்பதை நாங்கள் காண்கிறோம்.

வானத்தில் பயங்கரமான தோற்றங்கள் – அக்கினி ஸ்தம்பங்களைப் போல் வானத்தில் மிதக்கும் பறக்கும் தட்டுகள். அது என்னவென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. பாருங்கள்? அதைக் குறித்த எந்தவித கருத்தும் கூட அவர்களிடம் இல்லை

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், ஜூலை 28, 1963, பத்தி எண் 604-608

நாம் ஒரு ஆபத்தான நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவை சம்ப விக்கும் போது, "இனி காலம் செல்லாது" என்பதாக வேதம் கூறுகிறது. சமயம் கடந்து கொண்டே போகிறது.

இப்பொழுது அநேக இடங்களில் பூகம்பங்கள் உண்டாவதைக் காணும் போது – அன்றொரு நாள் ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் அல்லவா?

வானத்தில் பயங்கரமான தோற்றங்கள் – அக்கினி ஸ்தம்பங்களைப் போல் வானத்தில் மிதக்கும் பறக்கும் தட்டுகள். அது என்னவென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. பாருங்கள்? அதைக் குறித்த எந்தவித கருத்தும் கூட அவர்க ளிடம் இல்லை.

சோதோம் அழிக்கப்படுவதற்கு முன்பு தூதர்கள் அங்கு சென்று விசாரணை செய் தார்கள் அல்லவா? உங்களுக்கு ஞாபக மிருக்கிறதா? (சபையோர் "ஆமென்" என்கின்றனர் – ஆசி) அவர்கள் குழுவாக கீழே வந்தனர், மூன்று பேர் வந்தார்கள். ஒருவர் ஆபிரகாமிடம் தங்கி விட்டார். உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? ("ஆமென்") அவர்கள் விசாரணை நியா யத்தீர்ப்புக்காக வானத்திலிருந்து இறங்கி வந்த ஒளிகள்...

அவை இப்பொழுது எங்கு காணப் படுகின்றன என்று பாருங்கள். ‘பென்டகனை’ சுற்றிலுமே அந்த பறக்கும் தட்டுகளை அவர்கள் காண்கின்றனர். அது தான் உலக நியாயத்தீர்ப்பு - சோதோம். அதில் ஒருவர் சபையின் பிரதிநிதியாக இருப்பார். அது தம்மை உறுதிபடுத்தும் கிறிஸ்துவே. "சாட்சிகள்... மேலே வானங்களில், கீழே பூமியில் அடையாளங்கள்." நிச்சயமாக.



# இயற்கை சூழல்கள், அடையாளங்கள், பறக்கும் தட்டுகள்  போன்ற மர்மமான அடையாளங்கள் வானத்தில் காணப்படுகின்றன



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: முறையிடுகிறது என்ன? சொல்!, ஜூலை 14, 1963, பத்தி எண் 235

இங்கே உலகம் இந்த நிலையில் உள்ளது. அங்கே அந்த தேசமும் அதன் நிலையும். ஸ்திரீகளும் அவர்களின் நிலை யில் உள்ளனர். அங்கே மனிதனும் அந் நிலையில் உள்ளான். அங்கே சபையும் அந்நிலையில் உள்ளது. எல்லாக் காரி யங்களும் அங்கே உள்ளன.

இயற்கை சூழல்கள், அடையாளங்கள், பறக்கும் தட்டுகள் போன்ற மர்மமான அடையாளங்கள் வானத்தில் காணப்படு கின்றன.

கடல்கள் கொந்தளிக்கின்றன. கடல் அலைகள் உயர எழும்புகின்றன.

மனிதனின் இருதயம் சோர்ந்து போதல், பயம், சிக்கல்கள் நிறைந்த காலம், நாடுகள் மத்தியில் பீதி, பயம், சபை விழுந்து போய்க் கொண்டிருக்கின்றன.



அவர்கள் தொலைக்காட்சியில் எவ்விதமாக பறக்கும் தட்டுகள் பென்டகனுக்கு மேலே புலனாய்வு விளக்குகளோடு பறந்தபடியே தொங்கிக் கொண்டிருந்ததை படம் பிடித்தோம் என்பதைக் காண்பித்தார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: கடைசி கால வித்தின் அடையாளம், மார்ச் 19, 1962, பத்தி எண் 74-75

இன்னுமொரு காரியத்தை நான் கூற விரும்புகிறேன்.

தேசங்களுக்கிடையே இக்கட்டும் துன் பமும் ஏற்பட்டுள்ளது; வானங்களிலே பயத்தை ஏற்படுத்தும் காட்சிகள், அது அவ்விதமாக உள்ளது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

கவனியுங்கள், அவற்றில் இரண்டை நாம் எடுத்துக்கொள்வோம். ஒன்பதரை மணி ஆவதற்கு இன்னும் இரண்டு நிமி டங்கள் நமக்கு உள்ளனவா? அதற்கு மேல்

இவ்வரங்கத்தினை நான் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. இம்மக்கள் நமக்கு இதை அளித்திருப்பது கிருபையே.

செவிகொடுங்கள். எத்தனை பேர்கள்... நீங்கள் அதைப் பார்த்திருக்கிறீர்கள்.

சமீபத்தில் தேசமானது அடையாளங் கள் நிமித்தமாக அசைந்து விட்டது.

விண்வெளி வீதியில் சுற்றி வந்த இம் மனிதன் என்னத்தைக் கண்டான் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? அவன் இதுவரை கண்டிராத காட்சிகளைக் கண்டான். அவைகள் என்னவென்று விஞ்ஞானத்திற் குக் கூடத் தெரியாது.

அவன் பூமியைச்சுற்றி வரும்போது, அதைத் தேடிப் பார்த்த போதும் அவர் களால் அதைக் கண்டுபிடிக்கவே முடிய

வில்லை. அவன் தான் சுற்றி வரும் கோள்வீதி தான் தூள் தூளாகிவிட்டதோ என்று எண்ணினான். ஆனால் அது அவ் வாறில்லை. அவனது கோள்வீதி சரியாகத் தான் இருந்தது. விளக்குகள்...

என்ன ஏற்பட்டது என்பதைக் கவனி யுங்கள்.

பறக்கும் தட்டுகளைப் பற்றி ரேடியோ விலும், நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், தொலைக்காட்சியிலும் அதைக் குறித்து பார்த்திருக்கிறீர்கள்; செய்தித்தாள்களிலும் வந்துள்ளது. எங்கிலும் அது தோன்றியுள் ளது.

பென்டகன் ஆறு வாரங்களுக்கு முன் னர், அதைப் பற்றி அறிக்கை வெளியிட் டது; அது ஒன்றும் எட்டுக் கட்டிய

கற்பனைக் கதை அல்ல. (பென்டகன் என்பது அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத் துறையை சார்ந்த (இராணுவ) அலுவல கங்கள் அமைந்த ஐந்து பக்கமுள்ள (ஐங்கோண வடிவிலான) கட்டிடம் ஆகும் – அமெரிக்க இராணுவத் தலைமைப் பீட அலுவலகம் – தமிழாக்கியோன்)

அவர்கள் தொலைக்காட்சியில் எவ்வித மாக பறக்கும் தட்டுகள் பென்டகனுக்கு மேலே புலனாய்வு விளக்குகளோடு பறந்த படியே தொங்கிக் கொண்டிருந்ததை படம் பிடித்தோம் என்பதைக் காண்பித்தார்கள்.

வாஷிங்டன் டி.சி. முழுவதிலும் அது காணப்பட்டது. அது ராடாரிலே தெரிந்தது, அதை அருகில் போய் பார்க்க பைலட்டு களை அனுப்பினார்கள், அவர்கள் அவை

களை சுற்றி சூழ்ந்து நெருங்கி வளைக்கப் பார்த்தார்கள்.

அப்போது, அவைகள் மின்னல் வேகத்தில் அங்கிருந்து கடந்து சென்று விட்டன.

அதில் காணப்பட்ட அறிவுத்திறன், விவேகம் – அது எப்படிப்பட்டது.

பயப்படத்தக்கதான அடையாளங்கள், காட்சிகள் வானங்களிலே காணப்படும் என்றும், மனிதருடைய இருதங்கள் பயத்தினாலே சோர்ந்து போகும் என்றும் இயேசு கூறினார்; ஜனங்களுக்கு மத்தியில் இடுக்கண் உண்டாகும். தத்தளிப்பின் காலங்கள் உண்டாகும் என்று இயேசு கூறினார். (லூக்கா 21:25,26)

*Only believe, Only believe*
*All things are possible,*
*Only believe.*



வானத்தில் பறந்து கொண்டிருக்கும் அந்த தட்டுகள் – அவர்கள் "பறக்கும் தட்டுகள்" என்று அழைக்கின்றனர்... சரி, அதை பேசாமல் அப்படியே விட்டுவிடுவது நல்லது. "அவர்கள் (பறக்கும் தட்டில் வருகிறவர்கள்) எவ்விதம் காணாமற் போய் விடுகின்றனர் என்பதைக் குறித்து கேள்விப்பட்டீர்களா?" என்று கேட்கின்றனர். அவர்கள் சொல்வதைக் கேளாதீர்கள். அவர்கள் அங்கு தான் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்கள் நமது கண்களுக்குத் தென்படாமல் மறைந்து விடுகின்றனர்.

அப்படித்தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கும். அவைகளில் ஒன்று கீழே இறங்கி வரும். பூமிக்குரிய இந்த சரீரம் வானத்துக்குரிய சரீரத்தை தரித்துக் கொள்ளும். அப்பொழுது தோல், மயிர், எலும்புகள்... அது ஒரு நொடிப் பொழுதில் மறுரூபமாகும். அது விண்வெளியிருந்து கீழே இறங்கி வந்து அவர்களைக் கொண்டு செல்லும். அவையெல்லாம் (பறக்கும் தட்டுகள்) இப்பொழுதே வந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். "பென்டகன்" வானத்தில் தோன்றும் அந்த மர்மமான ஒளியைக் குறித்து வியந்து கொண்டிருக்கிறது. ஜெபர்சன்வில்லில் வெளியிடும் செய்தித்தாள் ஒன்றில் இந்த மர்மமான ஒளியைக் குறித்து வெளியிட்டிருந்தனர். "அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்று அதில் எழுதியிருந்தது. சிறு பிள்ளைகளே, நான் கூறுவதைக் கேளுங்கள். வரப்போகும் ஒரு நாளில் அவை உங்களையும் கொண்டு செல்லும் (பாருங்கள், பாருங்கள்?). கவலைப்பட வேண்டாம். "சோதோமின் நாட்களில் நடந்தது போல..." என்று இயேசு கூறினதை நினைவு கூருங்கள்.

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# பறக்கும் தட்டுகள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து